# நம்மவர் தொழிற்சங்கப் பேரவையின் முதல் பொதுக்குழு!

## 01-11-2021

வணக்கம்,

நம்மவர் தொழிற்சங்கப் பேரவையின் முதல் பொதுக்குழு மற்றும் டாக்டர் திரு. கமல்ஹாசன் அவர்களின் 67வது பிறந்த நாளை முன்னிட்டு தொழிலாளர்களின் நலன் காக்கும் இலவச மருத்துவ முகாம் ஆகியவை, பேரவைத் தலைவர் திரு.சு.ஆ.பொன்னுசாமி அவர்களின் தலைமையிலும் மக்கள் நீதி மய்யம் துணைத் தலைவர் திரு.ஆர்.தங்கவேலு அவர்கள் முன்னிலையிலும் கட்சியின் தலைமை அலுவலகத்தில் கடந்த 31.10.2021 அன்று காலை 9 மணிக்கு நடைபெற்றது.

நம்மவரின் 67வது பிறந்த நாளை முன்னிட்டு நடைபெற்ற இலவச சிறப்பு மருத்துவ முகாமை, மக்கள் நீதி மய்யம் நிர்வாகக் குழு உறுப்பினர் திருமதி.ஸ்ரீப்ரியா அவர்கள் துவக்கிவைத்தார். இருதய சிகிச்சையில் தலைசிறந்த மருத்துவரான டாக்டர் திரு.சு.ரகுபதி அவர்களின் தலைமையிலான மருத்துவக் குழுவினர், தொழிலாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு இருதயம், பொதுமருத்துவம் தொடர்பான பரிசோதனைகள் செய்து, தகுந்த மருத்துவ ஆலோசனைகளோடு மருந்துகளை முற்றிலும் இலவசமாக வழங்கினர்.

இரண்டாவது அமர்வாக நடைபெற்ற பேரவையின் முதல் பொதுக்குழுவில், நலிவடைந்த பெண் தையல் தொழிலாளருக்கு மின்சாரத்தில் இயங்கும் தையல் இயந்திரமும், இரண்டு இஸ்திரித் தொழிலாளர்களுக்கு இஸ்திரிப் பெட்டியும் வழங்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து நடைபெற்ற இரண்டாம் ஆண்டுக்கான நிர்வாகிகள் தேர்வில் பேரவைத் தலைவராக திரு.சு.ஆ.பொன்னுசாமி அவர்களும், பொதுச்செயலாளராக திரு.வி.ரவிச்சந்திரன் அவர்களும் 2026 அக்டோபர் மாதம் வரை 5 ஆண்டுகள் அவரவர் வகிக்கும் பொறுப்பில் தொடரவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அத்துடன் பொருளாளராக திருமதி.மா.பானுமதி, துணைத் தலைவர்களாக கே.மாடசாமி, எம்.கே.ராஜன், ஆர்.சொக்கர், ஏ.மெல்கியோ, ஜி.ரவிச்சந்திரன், பி.குணசேகரன், வி.புண்ணியமூர்த்தி, டி.சேகர், துணைச் செயலாளர்களாக திருமதி.பி.ஸ்ரீரித்திகா, எம்.புகழ்முருகன், LIC.எஸ்.சுரேஷ், வி.மோசஸ், எம்.விஜயகுமார், ஏ.ராஜீ, கே.முருகேசன், செயற்குழு உறுப்பினர்களாக எம்.ஆனந்த், கே.சீனிவாசன் ஆகியோர் ஒருமனதாகத் தேர்வுசெய்யப்பட்டனர்.

நன்றி!

ஊடகப்பிரிவு – மக்கள் நீதி மய்யம், சென்னை.